1987 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 264 மற்றும் 265 சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

விவசாயிகளிடமிருந்து வர வேண்டிய கடன் தொகை.

264 --(*வினா எண். 2204) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு நி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், நிலவள வங்கி மூலமாகவும், வழங்கப்பட்ட கடன்களில் 30-6-1984 முடிய நிலுவையிலுள்ள கடன் அளவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட கடன்களில் 30-6-1984 அன்று 31,873.16 இலட்சம் ரூபாயும் நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட கடன்களில் 18,750.73 இலட்சம் ரூபாயும் நிலுவையாக இருந்தன.

265—(*வினா எண் 11226) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

30-6-1986 முடிய கூட்டுறவுத் துறைக்கு விவசாயிகளிடமிருந்து வரவேண்டிய கடனில் அசல் மற்றும் வட்டி முறையே எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-6-1986 முடிய கூட்டுறவுத் துறைக்கு விவசாயிகளிடமிருந்து வரவேண்டிய கடன் ரூ. 434.85 கோடி, வட்டி ரூ. 139.17 கோடி.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலுவையிலுள்ள வட்டியில் இந்த அரசு அறிவித்து இருக்கக் கூடிய சலுகையின் அடிப்படையிலே இதுவரையில் எவ்வளவு தொகை வட்டி தள்ளுபடி சலுகையின் கீழ் விவசாயிகள் பெற்றிருக்கிறார்கள்? அடுத்த தவணை சூன் 30-க்குள் கட்ட வேண்டுமென்று சொல்லியிருப்பதை தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய வறட்சியைக் கருதி, 1988 ஆம் ஆண்டு வரையிலே இந்தத் தவணையை ஒத்திவைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 28—2—1987 வரையில் வசூலான தொகை பற்றிய முழு விவரக் குறிப்பும் என்னிடத்தில் இல்லை. ஆனால் ஓரளவுக்கு வசூலாகியிருக்கிறது; இன்னும் வசூலாகிக் கொண்டிருக்கிறது. பாக்கியை பெரும்பகுதியினர் செலுத்தியிருக்கிறார்கள்; முழுமையாகச் செலுத்தியவர்களும் இருக்கிறார்கள்; பாதி செலுத்தியவர்களும் இருக்கிறார்கள். 30-6-1987-க்குள் மொத்தத்தையும் செலுத்த வேண்டும். ஏற்கெனவே இப்படிப்பட்ட ஆணை வந்து, அது நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. கோ. வீரய்யன் : தலைவரவர்களே, 28-2-1987-க்குள் விவசாயிகளில் பலர் முழுமையான கடனையும் பலர் பாதிக் கடனையும் செலுத்தியிருக்கிறார்கள். மேலும் ஜூன் 30-க்குள் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற வறட்சி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இன்னும் கொஞ்ச நாட்களுக்கு கருணை அடிப்படையில் தள்ளி வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, 30-6-1986 முடிய அரசுக்கு கூட்டுறவுத் துறையிலிருந்து வரவேண்டிய அசல் 434 கோடி ரூபாய் என்றும் வட்டி 139 கோடி ரூபாய் என்றும் சொன்னார்கள். இதற்கு முன்னால் பல்வேறு நேரங்களில் சொன்னாலும் கூட, நான் இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இதுவரை வரலாறு காணாத அளவுக்கு வறட்சி இந்த ஆண்டு கடுமையாக இருக்கிற காரணத்தால் விவசாயிகள் குடிபெயரக்கூடிய அபாயகரமான நிலைமை அவர்களுக்கு உருவாகியிருப்பதால், தினசரி உணவுக்கே போராடிக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் தாராளமனதோடு மனிதாபிமான அடிப்படையில் கடன் வசூலை ஒத்திவைக்க இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு கடுமையான வறட்சியாக இருக்கலாம். இந்தபாக்கி எல்லாம் 10 ஆண்டு, 12 ஆண்டு காலத்திற்கு முன்னாலிருந்தே இருக்கிறது. இதற்கு முன்னால் இப்படிப்பட்ட வறட்சி இல்லை என்பது உண்மை. அப்போது ஏன் அவர்கள் கட்டாமல் இருந்தார்கள்? ஏன் அசட்டையாக இருந்தார்கள்? ஏன் கட்ட மறந்தார்கள் என்பதை மாண்புமிகு சித்தன் அவர்கள் தான் சொல்ல வேண்டும். அப்படிக்கட்டாமல் இருந்ததால், வறட்சி காரணமாக ஓரளவுக்கு முடியாமல் இருந்தாலும், பாக்கி வசூலாக வேண்டுமே என்பதற்காக அரசு சலுகை அளித்திருக்கிறது. 125 கோடி ரூபாய்க்கு அரசு பொறுப்பேற்றிருக்கிறது. தள்ளுபடி, தள்ளுபடி என்பதால் அதற்கு தள்ளிவிட்டார்கள் என்று பொருள் அல்ல. அதற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்கிறது என்றுதான் பொருள். 125 கோடி ரூபாய் அரசு நிதியிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு தருகிறோம் என்று பொருள். அரசு கஜானாவிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு மாறுகிறது என்பதைத் தவிர விவசாயிகளிடம் வசூல் செய்யாமல் விட்டுவிடுகிறோம் என்று கருதக்கூடாது. ஆகவே, அசல், வட்டி, அபராத வட்டி, சலுகை பற்றி எடுத்துச் சொன்னோம். காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் மற்ற கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 28-2-1987 வரையில் கருணைகாட்டி கடன் வசூல் ஒத்திவைக்கப்பட்டது.

1987 ஏப்ரல் 3]

அவர்களுடைய அறுவடை முழுவதும் கிடைத்து, கட்டக்கூடிய அளவுக்கு 28-2-1987 வரை காலம் நீட்டிக்கப்பட்டது. இந்த அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 28-2-1987 வரை பல்வேறு கட்சித் தலைவர்கள், குறிப்பாக தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப் பட்டதாகச் சொன்னார்கள். அது வரவேற்கத் தக்கது. ஆனால் வறட்சி இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்க வில்லை. வசதிபடைத்தவர்களிடம் வசூல் செய்ய வேண்டும்; அவர்கள் கட்டாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் வறட்சியின் காரணமாக ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாமல், கட்ட இயலாமல் இருக்கிறவர்களுக்கு, முடியாமல் இருப்பவர்களுக்கு அரசாங்கம் கடனை ஒத்திவைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இயலாதவர்கள் என்ற கணக்கை எந்த அடிப்படையில் நிர்ணயிப்பது, எந்த ஸ்கேலை வைத்து அளந்து பார்ப்பது என்று தெரியவில்லை. இயலாதவர்கள் எல்லாம் திருமணம் நடத்து கிறார்கள், திருவிழா நடத்துகிறார்கள், கும்பாபிஷேகம் பண்ணு கிறார்கள், யாகசாலை நடத்துகிறார்கள், கஜபூஜை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு செலவுகளுக்கு இடம் கொடுக்கும்போது இந்த சாதாரண கடன் பணத்தைக் கட்ட முடியாதவர்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே, இப்போது இருக்கிற நிலைமை நடைமுறையில் இருக்கிறது. நிலைமைகளை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது.

சைதையில் கூட்டுறவுத் துறை மூலம் சுயசேவை அங்காடி.

266—(*வினா எண். 12155) திரு சைதை சா. துரைசாமி: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சைதை தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் புதிய சுயசேவைப் பிரிவு அங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மொத்தம் எத்தனை சுய சேவைப் பிரிவு அங்காடிகள் கூட்டுறவுத் துறையில் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? விரிந்து, பரந்துகொண்டிருக்கிற சென்னை